# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 2/2020** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : திரு.கணேசன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 07 July 2026.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது குருவிகுளம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குருவிகுளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த ராஜா மற்றும் காவல் ஆய்வாளர் கண்ணன் ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.11.2018-ம் தேதி 22.00 மணிக்கு உதவி ஆய்வாளராக ராஜா நிலையப்பொறுப்பில் இருந்தபோது வாகைகுளம் சி.எஸ்.ஐ சர்ச் தெரு, ஆண்ட்ரூ

என்பவரின் மகன் ஏசுதாஸ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.338/2018 இ.த.ச.பிரிவுகள் 279, 304(a) –ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் கண்ணன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெரிய ஈஸ்வரம் மற்றும சமுத்திரகனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் ஏசுதாஸ், பிரிட்டோ, சுந்தர்சிங், சுஜிர்த்தராஜ், மணிகண்டன், பெரியஈஸ்வரன், சமுத்திரகனி மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த உதவி ஆய்வாளர் ராஜா, இறந்தவரின் பிரேதத்துடன் பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற முதல் நிலை காவலர் காளிதாஸ், ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். பின்னர் வாகன விபத்தில் இறந்த வில்லியம் பொன் சினிவாசகதாஸ் என்பவரின் பிரேதத்தை உரிய சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை (inquest) செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். அந்த **பிரேத விசாரணை அறிக்கை** (inquest)**அ.சா.ஆ.6 ஆகும்**. பின்னர் பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அதன் அடிப்படையில் பிரேதத்தை பரிசோதனை செய்து சான்று வழங்கிய சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர். ஆஷா என்பவரை விசாரணை செய்து, பிரேத பரிசோதனை சான்று பெற்றார். **அந்த பிரேத பரிசோதனை சான்று(post mortem certificate) அ.சா.ஆ. 7 ஆகும்**. பின்பு மேற்படி வாகன விபத்தை பற்றி வாகனத்தை ஆய்வு செய்த மோட்டர் வாகன ஆய்வாளர் பத்மபிரியா என்பவர் TN 76 Y 0790 MCWUG – PH Motor என்ற வாகனத்தை ஆய்வு செய்து மோட்டர் வாகன ஆய்வுச்சான்றிதழ் வழங்கினார்.

அந்த மோட்டார் வாகன **ஆய்வுச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகும்**. அதே போன்று அதே வாகன விபத்தில் TN 79 E 1027 என்ற மாருதி டிசைர் காரை ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வுச்சான்றிதழ் வழங்கினார். அந்த மோட்டார் **வாகன ஆய்வுச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆகும்** . பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரியை கடந்த 08.11.2018 அன்று காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து 27.11.2018–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச .பிரிவுகள் 279, 304(a) –ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றாலும், பிரேத சான்று பெறவில்லை என்றாலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.